அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 56/2025

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 30.06.2026 |
| பெயர் தங்கப்பன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>1,2,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மனைவி சிவில் இறப்பு அறிவிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி இறந்துவிட்டாரா என்றால் தெரியாது. என் மனைவி மனநிலை பாதிப்பு உள்ளது. எத்தனை காலங்களாக அவ்வாறு இருந்தது என்றால் சுமார் 15 வருடங்களாக மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார். அதற்கு சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்தார். எனக்கும் என் மனைவிக்கும் 3 பிள்ளைகள் உள்ளார்கள். என் மனைவி ஜெயகுமாரி இந்து மதத்தை கடைபிடித்து வந்தார். எந்த இடத்தில் காணாமல் சென்றார் என்றால் வீட்டில் இருந்து கோவிலுக்கு செல்லவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்.

2. காணாமல் சென்றது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா

என்றால் புகார் கொடுத்தேன். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் தேடிபார்த்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. 5ம் பிரதிவாதி அனைத்து நடவடிக்கையும் எடுத்துள்ளார் என்பதால் அவருக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

<u>3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். என் மனைவி காணாமல் போன தேதி 14.08.2017 ஆகும். காணாமல் சென்ற பிறகு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகார் கொடுத்தபிறகு அம்பத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் எனது மனைவி காணவில்லை சம்மந்தமாக மனுகொடுத்தேனா என்றால் இல்லை. எனது மனைவிக்கு எந்த மருத்துவமனையில் மனநல சிகிச்சை பெற்றுவந்தேன் என்றால் அண்ணாநகர், பார்ஷ்யம் மருத்துவமனை. அந்த மருத்துவமனையில் கொடுத்த மருத்துவ ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் மருத்துவ சீட்டுகள் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மருத்துவ வரலாறு அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என் மனைவிக்கு அடையாள அட்டை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.